(3) 1974-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த—பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74.)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர வர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த--பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74), ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

சமுதாய நலத் திட்டத்திற்கான மானியக் கோரிக்கை மீது சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் நகராட்சி களுக்கான தேர்தல்கள், மதுரை மாநகராட்சி உட்பட, ஜூலைத் திங்கள் கடைசி வாரத்தில் நடைபெறும் என்று அறிவித்தேன். தற்போது நகர மன்ற உறுப் பினர்கள் பதவிக் கால அளவு, 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த—பதவிக்கால நீட்டிப்பு) சட்டத்தின் மூலம் (தமிழ் நாடு சட்டம் 22/71) 1974-ம் ஆண்டு மே திங்கள் 1-ம் நாள் வரைதான் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும், சில நகரமன்றங்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும், தொகுதி பிரிப்பதை மறுபரிசீலனை செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவற்றைப் பரிசீலனை செய்வதற்கும் சிறிது காலம் தேவைப்படுகிறது. எனவே நகர மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தை 1974-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ம் தேதி வரை நீட்டிப்பதற்கு இம்மன்றத்தின் முன்பு உள்ள இச் சட்ட முன்வடிவு வகை செய்கிறது.

பேரவையில் நிறைவேற்றப்பட்ட இச்சட்ட முன்வடிவினை இம்மன்றமும் எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

@ 142 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த-பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 24/74)

1974 எப்ரல் 23] [மேலவைத் தலைவர்]

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1974) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) 1974 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1974.)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1974-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்தம்—பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1974) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 143 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.